# வருவாய்த்துறை வரலாறு.
# History of Revenue Department.

கி.மு .320 - 650 காலகட்டத்தில் குப்தர்கள் ஆட்சியில் நிலவரியை பணமாக கட்டும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. பழங்கால பேரரசர்கள் மற்றும் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நிலவரித் தொகை முக்கிய வருவாயாக இருந்துள்ளது. இந்த நிலங்கள் ஜாகிர்களாக பிரிக்கப்பட்டு அவை ஜாகிர்தாரர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அதனை பிரித்து ஜாகிர்தாரர்கள் ஜமின்தாரர்களுக்கு ஒதுக்கினர்.நிலவரி வசூல் செய்தல் முகலாய மன்னர்கள் ஆட்சிக்கு முன்னதாக வட இந்திய துருக்கி சுல்தான் மன்னர்கள் மற்றும் தென்னிந்திய சேர, சோழ, பாண்டியர்கள் அனைவரும் இந்து அரசர்கள் கடைபிடித்த நிலவரி முறையையே பின்பற்றியுள்ளார்கள். சூரி வம்ச மன்னர் ஷேர்ஷா சூரி என்பவர் (கி.பி.1538 முதல் 1545 முடிய) நிலவரிக்காக புதிய நில அளவை மற்றும் நில வகைபாடு முறையை கொண்டு வந்து ரூபாய் முறையை அறிமுகப்படுத்தினார்.

முகலாய மன்னர் அக்பர் (கி.பி.1556 முதல் 1605 வரை) என்பவர் தோடர்மால் என்ற நிதி அமைச்சர் உதவியால் மன்னர் ஷேர்ஷா சூரி கொண்டு வந்த நில வருவாய் நிர்வாகத்தை மேம்படுத்தினார். அக்பர் எழுதிய அயினி அக்பரி மற்றும் அக்பர் நாடா நூல்களில் நிலம் மற்றும் நில வருவாய் தொடர்பான சட்டங்கள் குறித்து எழுதப்பட்டுள்ளன. மேலும் நல்லமுறையில் நீர்ப்பாசனம் பெறும் நிலங்களுக்கு அதிகபட்சமாக 1/3 பங்கு நிலவரி விதிக்கப்படும், இதர இனங்களுக்கு இதைவிட குறைவாகவும் விதிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 1632-ல் பிரிட்டிஷார்ல் வணிகர்களாக கட்டாக் நகருக்கு வந்துள்ளார்கள். மேலும் கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகத்தில் கி.பி. 1698-ல் முகலாய மன்னர்களிடமிருந்து 3 கிராமங்களுக்குரிய ஜமின்தார் உரிமையை பெற்றுள்ளனர். மேலும் 1757-ம் ஆண்டில் நடைபெற்ற பிளாசிப்போர் மற்றும் 1765-ம் ஆண்டில் நடைபெற்ற பாக்ஸர் போர் ஆகியவற்றில் பெற்ற வெற்றிகளை தொடர்ந்து பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் காலூன்றியது.

கி.பி. 1772-ம் ஆண்டில் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர் கவர்னர் ஜெனரலாக (Governer General) பணியேற்ற தருணத்தில் கிழக்கிந்திய கம்பெனி இயக்குநர்களின் ஆணையின் பேரில் வருவாய் வாரியம் **(Board of Revenue)** அமைத்து கலெக்டர்கள்(**Collectors)** நியமனம் செய்யப்பட்டார்கள்.

கி.பி. 1786-ல் லார்டு காரன்வாலிஸ் என்பவர் கவர்னர் ஜெனரலாக பணியேற்றப் பிறகு 1789-ம் ஆண்டில் ஜமின்தார்களுடன் பத்தாண்டு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

கி.பி. 1793-ம் ஆண்டின் நிலையான நிலவரித் திட்டம் ஒழுங்குமுறை சட்டத்தின் ( Permanent Land Revenue Scheme Regulation Act) படி பத்தாண்டு ஒப்பந்தங்கள் நிலையாக மாற்றப்பட்டன.

**பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 3 வகையான நிலவரி வசூல் முறைகள் இருந்தன.**

1. ஜமின்தாரி முறை ( Zamindari method)
2. ரயத்துவாரி முறை ( Ryotwari method)
3. மகூல்வாரி முறை ( Mahalwari method)

(1) ஜாமின்தாரி முறை கி.பி. 1793-ல் நிலையான நிலவரித் திட்ட சட்டத்தின் படி லார்டு காரன்வாலிஸ் என்பவரால் கொண்டு வரப்பட்டது. இதில் நிலவரி வசூலில் 1/11 பங்கு ஜமின்தாரருக்கும், மீதமுள்ள 10/11 பங்கு கிழக்கிந்திய கம்பெனிக்கும் பிரிக்கப்பட்டது.

(2) ரயத்துவாரி முறை கி.பி. 1820-ம் ஆண்டில் தாமஸ் மன்ரோ என்பவரால் அறிமுகப் படுத்தப்பட்டது. இந்த முறை மெட்ராஸ், பாம்பே, அஸ்ஸாமில் ஒரு பகுதி மற்றும் கூர்க் மாகாணங்களில் அமல்படுத்தப்பட்டது இதில் நிலத்தின் உரிமை நேரடியாக உழவர்களுக்கு (Peasants) ஒப்படைத்து நேரடியாக வரி வசூலிக்கப்பட்டது. இந்த முறையில் புஞ்சை நிலங்களுக்கு 50% மற்றும் நஞ்சை நிலங்களுக்கு வரி வருவாய் விகிதங்களில் நிர்ணயிக்கப்பட்டது.

(3) மகல்வாரி முறை கி.பி. 1833-ல் வில்லியம் பெண்டிங் என்பவரால் மத்திய, வடமேற்கு எல்லை, ஆக்ரா, பஞ்சாப் மற்றம் கங்கை சமவெளி பகுதிகளில் அமல்படுத்தப்பட்டது. இந்த முறை. ஜமின்தாரி மற்றும் ரயத்துவாரி முறைகளிலுள்ள பல்வேறு நடைமுறைகளை பின்பற்றியுள்ளது.

**தற்கால வருவாய் நிர்வாகம் (Present Revenue Administration) கீழ்க்கண்ட காலகட்டத்தில் 5 (ஐந்து) பிரிவுகளாக அமைந்துள்ளது.**

## (1) 1803-ம் ஆண்டிற்கு முன்னா;. ( The Period before 1803).

இங்கிலாந்து நாட்டின் குயின் எலிசபெத் -1 என்ற அரசி காலத்தில் ஒரு சாசனம் (Charter) மூலமாக கிழக்கிந்திய கம்பெனி ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இந்த கம்பெனி கி.பி.1773-ம் ஆண்டில் ஏற்பட்ட ஒழுங்குமுறை சட்டத்தின் படி பெங்கால், பம்பாய் மற்றும் சென்னை மாகாணங்களில் நிர்வாகம் செய்தனர். மேலும் வருவாய் நிர்வாக அதிகாரங்களை கவர்னர் ஜெனரல் (Governer General) பெற்றார். பின்னர் வருவாய் நிர்வாக பணிகளை நிர்வகிக்க வாரியம் அமைக்கப்பட்டது. இதற்காக **20.06.1789**-ம் அன்று பிரிட்டிஷ் அரசு சென்னை மாகாணத்தில் வருவாய் வாரியம் **(Board of Revenue)** நிறுவியது. இதில் முதலில் புலத்தில் நில அளவை மற்றும் நிலவரித் திட்டப் பணி மற்றும் நிலப் பதிவுருக்கள் பாதுகாப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## (2) மெட்ராஸ் ஒழுங்குமுறை சட்டம் -1- 1803. (The Madras Regulation Act- I of 1803).

மெட்ராஸ் வருவாய் வாரிய ஒழுங்குமுறை சட்டம் 1803-ல் வருவாய் வாரியத்திற்கு வருவாய் நிர்ணயித்தல் உட்பட்ட உப்பு அப்காரி வருவாய் முத்திரை தீர்வை உள்ளிட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒழுங்குமுறை VII of 1817-ன் படி சமய மற்றும் அறநிலையங்களை கண்காணிக்கும் அதிகாரம் வழங்கப் பட்டது. மேலும் கடல்சுங்கம், வணிகம், வரி, உள்ளூர் அமைப்புகள், நீர்ப்பாசனம், படகு, கால்வாய்கள் மற்றும் சாலைகள் பணிகளை மேற்பார்வை செய்யும் அதிகாரமும் வழங்கப்பட்டது. இதை தவிர மாவட்ட ஆட்சியர்களின் முடிவுகளுக்கான மேல்முறையீடு அதிகாரங்களை வருவாய் வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. 1849-ம் ஆண்டில் வருவாய் வாரிய உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட மற்றும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

## (3) 1916-ம் ஆண்டு முதல் 1947 வரை வருவாய் வாரியத்தின் பணிகள். (The Board of Revenue from 1916 to 1947)

கடந்த 1916-ம் ஆண்டில் வேளாண்மை. கால்நடை மற்றும் கூட்டுறவு துறைகள் (Agriculture, Animal Husbandry and Cooperative Departments) நிறுவப்பட்டன. பின்னர் வருமான வரி, ஆயத்துறை, கடல் சுங்கம் மற்றும் உப்பு துறைகள் (Income Tax, Excise, Customs and Salt Departments) அமைக்கப்பட்டன. இதன் பின்னர் வாரிய நிலை ஆணைகள் ( Board Standing Orders) வகுக்கப்பட்டன..

## (4) 1947-க்கு பிறகு 1980-ம் ஆண்டு வரை வருவாய் வாரியத்தின் பணிகள் (The Board of Revenue after 1947 until 1980).

சுதந்திர இந்தியாவில் சமுக நலம் மற்றும் நீதிமன்றங்கள் துறை ( Social welfare and Judicial Departments) அமைக்கப்பட்டன. மேலும் கடந்த 05.12.1980 அன்று வருவாய் வாரியம் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, வருவாய் நிர்வாகம் (Revenue Administration ) நில நிர்வாகம் (Land Administration) மற்றும் நிலச் சீர்திருத்தம் (Land Reforms) ஆகிய **3** (மூன்று) துறைகள் நிறுவப்பட்டன.

வருவாய் நிர்வாகத்துறை, சமூக நலம், வருவாய், மாவட்ட நிர்வாகப் பணிகள் பேரிடர் தணிக்கும் மற்றும் மேலாண்மை பணிகளை நிர்வகிக்கிறது. மேலும் அனைத்து துறைகளுக்கும் தாய்த் துறையாக **(Mother of all departments)** அமைந்து, மாநில நிர்வாக பணிகளுக்கு நேரடியாகவும், அச்சாணியாகவும் **(Direct and Pivotal role)** உள்ளது.

## 1. வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் (Commissionerate of Revenue Administration and Disaster Management).

மாநிலத்தின் அடிப்படை வருவாய் நிர்வாக பணிகளை மேற்கொள்ளும் துறையாகும். மேலும் மாவட்ட மற்றும் உட்கோட்ட அளவில் அனைத்து துறைகளுக்கும் நிர்வாக துறையாகவும் விளங்குகிறது. மேலும் சமூக நலத்திட்ட இயக்குநர்,(Director of Social Security Scheme) பேரிடர் மேலாண்மை இயக்குநர்( Director of Disaster Management) மற்றும் வருவாய் நிர்வாக இணை ஆணையர் ( Joint Commissioner of Revenue Administration) உதவியுடன் வருவாய் நிர்வாக ஆணையர் (மாநில நிவாரண ஆணையர் ( Commissioner of Revenue Administration/ State Relief Commissioner ) இந்த துறை பணிகளை மேற்கொள்கிறார்.

**இந்த துறையின் முக்கிய பணிகள் ( Main duties)**

1. பொது வருவாய் நிர்வாகம் ( General Revenue Administration)
2. நிலவரி வசூல் ( Land Revenue Collection)
3. சமூக பாதுகாப்பு மற்றும் ஓய்வூதியத்திட்டங்கள் அமல்படுத்துதல் ( Social security and Pension Schemes)
4. துயர் துடைப்பு திட்டங்கள் ( Distress Relief Schemes)
5. குறை தீர் நடவடிக்கைகள் ( Redressal Activities)
6. பேரிடர் நிர்வாகம் மற்றும் தணிக்கும் பணிகள் ( Disaster Management and Mitigation Activities)
7. ஒழுங்கு மற்றும் அமல்படுத்தும் பணிகள் ( Regulatory and Implementing Activities)

அ) 1864 வருவாய் வசூல் சட்டம் ( The Revenue recovery Act 1864)

ஆ) 1878 - ஆண்டு புதைப்பொருள் சட்டம் ( The Treasure Trove Act 1878)

இ) 1884-ம் ஆண்டு தமிழ்நாடு வெடிபொருள் சட்டம் ( The Tamilnadu Explosives Act 1884)

ஈ) 1943-ம் ஆண்டு தமிழ்நாடு அடகு பிடிப்போர் சட்டம். ( The Tamilnadu Pawn Brokers Act, 1943)

உ) தமிழ்நாடு பொது கட்டிடங்கள் உரிமை சட்டம்1965 ( The Tamilnadu Public Buildings Licensing Act, 1965)

ஊ) 1969 -ம் ஆண்டின் தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவுகள் சட்டம் ( The Tamilnadu Births and Deaths Act, 1969 )

எ) 2003-ம் ஆண்டின் தமிழ்நாடு மிகை அதிக வட்டி பெறுவதை தடுப்பு சட்டம் (The Tamilnadu prohibition of charging Exorbitant interest act, 2003)

## (1) மாவட்ட நிர்வாகம் (District Administration)

இந்த துறை மாவட்ட அளவிலிருந்து கிராம அளவு வரை நிர்வாகப் பணிகளை மேற்கொள்கிறது. தமிழ்நாட்டில் 37 மாவட்டங்கள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் நிர்வாகம் நடைபெறுகிறது. மேலும் **28.12.2020** அன்று **38-**வது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டம் உதயமாகியுள்ளது. மேலும் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட அளவிலான அனைத்து துறைகளின் அலுவலர்களும் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட நீதிபதி(**District Collector / District Magistrate )** மேற்பார்வையில் பல்வேறு பணிகளை மேற்கொள்கிறார்கள்.

## (2) உட்கோட்ட அளவில் நிர்வாகம் (Sub Divisional Level Administration)

நிர்வாக வசதிக்காக ஒவ்வொரு மாவட்டமும் வருவாய் கோட்டங்களாக பிரிக்கப்பட்டு சார் ஆட்சியர் / வருவாய் கோட்ட அலுவலர்கள்,(**Sub Collector / Revenue Divisional Officer)** வருவாய் நிர்வாகம், சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரிப்பு, நில நிர்வாகம் மற்றும் வருவாய் கிராம நிர்வாகப் பணிகளை மேற்கொள்கிறார்கள். தற்போது **94** (புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சீர்காழி மற்றும் வேதாரண்யம் உட்பட) வருவாய் கோட்டங்கள் உள்ளன.

## (3) வட்ட அளவில் நிர்வாகம் ( Taluk Level Administration)

வட்ட நிர்வாகப் பணிகளை வட்டாட்சியர்(**Taluk Tahsildar)** தலைமையில் துணை வட்டாட்சியர்கள் (தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர்கள் மற்றும் தேர்தல் துணை வட்டாட்சியர் ∴ சரக வருவாய் ஆய்வர்கள் உதவியுடன் பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் வருமானம், இருப்பிடம், வாரிசு சான்று மற்றும் பொது மக்கள் விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்கு தேவையான நேரலை சான்றுகளை( Online ) வழங்கும் பணிகளை மேற்கொள்கிறார்கள். தற்போது **312** வட்டங்கள் உள்ளன.

## (4) சரக நிர்வாகம் (Firka Administration)

ஒவ்வொரு வட்டமும் சரகங்களாக( Firkas) பிரிக்கப்பட்டு பல கிராமங்களை உள்ளடக்கியதே சரகம் ஆகும். மேலும் சரக வருவாய் ஆய்வர் வருவாய் வசூல் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் பணிகளை மேற்பார்வை செய்வார். தற்போது **1199** சரகங்கள் உள்ளன.

## (5) வருவாய் கிராம நிர்வாகம் (Revenue Village Administration).

வருவாய் வாரியம் நடைமுறையில் இருந்த காலத்தில் கடந்த **14.11.1980** வரை கீழ்க்கண்டவாறு கிராம நிர்வாக அமைப்பு இருந்தது.

ஒரு வருவாய் கிராமம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் அடங்கிய ஒரு பகுதிக்கு ( Group Villages) ஒரு கிராம முன்சீப், கர்ணம், தலையாரி, வெட்டி மற்றும் நீர்கட்டி ஆகியோர் பணிபுரிந்தனர். இவர்கள் அனைவரும் பகுதி நேர பணியாளர்களாக( Part time basis) இருந்தனர். வாரிசு முறையும் பின்பற்றப்பட்டது. இவர்கள் நிரந்தரம் (Permanent) லாவணம் (Officiating) மற்றும் தற்காலிகம் (Temporary) என்ற முறையில் நியமனம் நடையிலிருந்தது.

கிராம முன்சீப் (Village Munsiff) என்பவர் வரி வசூல், சட்டம் ஒழுங்கு மற்றும் பலவகையான அவசரப் பணிகளையும் கவனித்து வந்தனர். இவரை கிராம தலைமை (Village Headman) என்றும் அழைக்கப்படுவதுண்டு. இவருக்கு உதவியாக தலையாரி (Thalaiyari) இருந்து வந்தார்.

கர்ணம் (Karnam) என்பவர் பலதரப்பட்ட கிராமக் கணக்குகளையும் பராமரித்து வந்தார். பயிராய்வு செய்தல், குத்தகை சாகுபடி, பல்வேறு புள்ளி விபரங்கள் ஆகிய அனைத்து பணிகளையும் கவனிப்பார். இவரை பட்டாமணியார் என்றும் அழைக்கப்படுவதுண்டு. இவருக்கு உதவியாக வெட்டியான் (Vettiyan) இருந்து வந்தார்.

நீர்கட்டிகள்,( Neerkattis) பாசன வசதிகளைப் பாதுகாத்து வந்தனர். பின்னர் இவர்கள் பொதுப்பணித்துறைக்கு லஸ்கர்(Luskar) என்ற பெயருடன் மாற்றப்பட்டனர்.

கிராம நிர்வாகத்தை மேம்படுத்த பகுதிநேர கிராம நிர்வாக அலுவலர்கள் ஒழிப்புச்சட்டம் எண் 10/80 மேதகு ஆளுநர் அவர்களால் கடந்த 13.11.1980 அன்று பிரகடனம் செய்யப்பட்டு கடந்த 14.11.1980 முதல் நடைமுறைக்கு வந்தது. அனைத்து முன்சீப் மற்றும் கர்ணம் ஆகியோர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். மேலும் தமிழ்நாடு பகுதி நேர கிராம அலுவலர் ஒழிப்புச் சட்டம் எண் 3/81-ன் படி மேற்கண்ட பதவிகள் ஒழிக்கப்பட்டன.

தமிழக அரசு கிராம முன்சிப் மற்றும் கர்ணம் ஆகிய இரு பதவிகளையும் ஒருங்கிணைத்து முழு நேர கிராம நிர்வாக அலுவலர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்க தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கீழ் கொண்டு வர அரசாணை பல்வகை எண் 2747 வருவாய்த்துறை நாள் 12.12.1980-ல் ஆணை பிறப்பித்தது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடியாக கிராம நிர்வாக அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் அரசு ஆணை (பல்வகை) எண் 362 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த (பணியாளர் -பி) துறை நாள் 21.06.1988-ல் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் பிரிவு 38 (பி) (ii) (38(b)(ii)-ன் படியுள்ள பிற்சேர்க்கை X (Annexure X)யாக கிராம நிர்வாக அலுவலர்கள் பணி விதிகள் 20.11.1984 முதல் அமலுக்கு வருவதாக வரையறுக்கப்பட்டுள்ளன.

கிராம நிர்வாக அலுவலர்கள் பணி நியமனம் தொடர்பாக பகுதி நேர கிராம அலுவலர்கள் தொடர்ந்த வழக்கில் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் பிறப்பித்த வழிமுறையின் பேரில் கீழ்க்கண்டவாறு கிராம நிர்வாக அலுவலர் நியமனம் செய்யப்பட்டது.

(1) **வகைபாடு -1 ( Category – 1)**

அரசாணை எண் 1195 வருவாய்த்துறை நாள் 06.07.1982-ன் படி 14.11.1980 அன்று பதவியில் இருந்து குறைந்தபட்சக் கல்வித் தகுதி 20.02.1982-க்கு முன் பெற்றிருந்த முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்கள் தகுதிகாண் குழு மூலம் கிராம நிர்வாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

(2) **வகைபாடு -2 ( Category – 2)**

அரசாணை எண் 1287 வருவாய்த்துறை நாள் 06.07.1988-ல் 14.11.1980 அன்று பதவியிலிருந்து 20.02.1982-க்குப் பின்னர் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெற்ற முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரைக்கப்பட்டு கிராம நிர்வாக அலுவலர்களாக பொது விதி 10(ஏ)(1)-(10A(1)-ன் கீழ் தற்காலிகமாக சில நிபந்தனைகளுக்குட்பட்டு நியமனம் செய்யப்பட்டனர்.

(3) வகைபாடு -3 ( **Category – 3**

அரசாணை எண் 954 வருவாய்த்துறை நாள் 16.10.1997-ல் 14.11.1980 அன்று பதவியில் இல்லாமல், ஆனால் அதற்கு முன்னர் குறுகிய காலம் பணிபுரிந்து, குறைந்தபட்சம் கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள் பெற்ற முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்களை அவர்களது பணிக்காலத்தின் அடிப்படையில் சிறப்பு பதிவேட்டில் பராமரிக்கப்படும் முதுநிலைப் பட்டியலின் படி அப்போது இருந்த காலியிடங்களிலோ அல்லது பிற்காலத்தில் எழக்கூடிய காலியிடங்கலோ கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

கிராம உதவியாளர்கள். (**Village Assistants)**

அரசாணை எண் 625, வருவாய்த்துறை நாள் 06.07.1995-ல் கிராமத் தலையாரி, வெட்டியான் ஆகியோர்கள் நிரந்தர பணியமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு கிராம உதவியாளர்களாக (Village Assistant) பெயர் மாற்றம் செய்யப்பட்டனர். மேலும் இவர்களுக்கான பணி விதிகளை அரசாணை பல்வகை எண் 521 வருவாய்த் (பணி 7(2) துறை நாள் 17.06.1998-ல் வரையறுக்கப்பட்டு, கடந்த 01.06.1995 முதல் முழு நேர கிராம உதவியாளர்களாக( Full Time basis) மாற்றப்பட்டனர். தற்போது 16743 வருவாய் கிராமங்கள் உள்ளன.

முக்கிய குறிப்பு :

1. பிரிட்டிஸ் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவரால் கடந்த 1772-ம் ஆண்டில் மாவட்ட ஆட்சியர் பதவி (District Collector) அறிமுகப்படுத்தப்பட்டது.

2. தற்போதுள்ள வட்டாட்சியர் என்ற பதவி முகலாய மன்னர் காலத்தில் (கி.பி.1556) தெஹ்சில்தார்(Tehsildar) என அழைக்கப்பட்டது. இதில் தெஹ்சில் ( Tehsil is presumably an Arabic word meaning as revenue collection)என்பது அராபிய மொழியில் வருவாய் வசூல் என்ற பொருளிலும், தார் என்பது பெர்சியன் மொழியில் அந்த பதவியை வகிப்பவர்(dar is a persian word meaning as holder of the position) என பொருள்படும். இதிலிருந்து வட்டாட்சியர் என்ற பதவி சுமார் **500** ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டுள்ளது என தெரிய வருகிறது.